# "என்னையும் அமைச்சர்களையும் கொலைசெய்ய திட்டமிட்டனர்"

## ஜனாதிபதி தகவல்

★ விலை ரூபா 1:00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 17 முஹற 16 இதழ் 263

யாழ்ப்பாணம் புதன்கிழமை 3—11—82

**லிகிதர் தேவை**

வருமானவரிக் கணக்கெழுதும் அனுபவமுள்ள ஆங்கில அறிவுடைய லிகிதர் தேவை. ஒய்வு பெற்ற அரசாங்க ஊழியர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**ஹோட்டல் றெலெக்ஸ்**

340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 5029

(கொழும்பு)

"ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், என்னையும் சில அமைச்சர்களையும் படுகொலைசெய்ய திட்டமிடப்பட்டிருந்ததாக எனக்குத் தகவல்கள் கிடைத்தன. திரு. அநுரா பண்டாரநாயக்காவையும், ஆயுதப்படைகளின் தளபதிகளையும் கொலை செய்து, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை சிறையில் வைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. இச்சதித்திட்டங்களை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஒரு குழு தயாரித்திருந்தது. தேர்தல் பிரசார இயக்கம் நடத்துவதிலும் இக்குழுவே

[8ம் பக்கம் பார்க்க]

# "நான் தமிழீழ பிரஜை தமிழ் மண்ணில் நடந்த சம்பவத்தை விசாரிக்க இந்நீதிமன்றுக்குரிமைஇல்லை!"

## நீர்வேலி கொள்ளை வழக்கு விசாரணையில் 'குட்டிமணி'

### நீதிமன்ற அதிகாரம் பற்றி இன்று தீர்ப்பு

(கொழும்பு)

"நான் தமிழீழப் பிரஜை. தமிழ் மண்ணில் நடந்த இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்று நான் கருதுவதால், இங்குஎதுவும் நான் கூறப்போவதில்லை" என்று 'குட்டிமணி' என அழைக்கப்படும் செல்வராசா யோகச்சந்திரன் மேல்நீதிமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பயங்கரவாததடுப்புச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஏழுவழக்குகளில் ஒன்றான நீர்வேலி வங்கி பணக்கொள்ளைவழக்கு நேற்று மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஸி எல். ரி மூனமலமுன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

### குற்றவாளியா? சுற்றவாளியா?

இவ்வழக்கின் எதிரிகளான நடராஜா தங்கவேல் தங்கத்துரை), செல்வராசா யோகச்சந்திரன் குட்டிமணி), செல்லத்துரை சிவசுப்பிரமணியம் [தவன்], நவரத்தினராஜா சிவபாதம் [சிவபாதம் மாஸ்டர் சிறீசபாரத்தினம், வைத்திலிங்கம் நடேசதாசன் [செனட்டர்] ஆகிய ஆறு பேர்களில் சிறீசபாரத்தினம் [5வது எதிரி] தவிர்ந்த ஏனைய ஐவரும் நீதிமன்றத்தில்சமுகமளித்திருந்தனர். ஐந்தாவது எதிரி இல்லாமலேயே வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமானது.

விசாரணை ஆரம்பத்தில் எதிரிகளைப்பார்த்து நீதிபதி "நீங்கள் சுற்றவாளியா, குற்றவாளியா?" என்று கேட்டார்.

இதற்கு எதிரிகள் அனைவருமே பொதுப்பட, "தமிழ் மண்ணில்நடந்த இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த

8ம் பக்கம் பார்க்க]

பஸ்ஸை மறித்து

## கண்டக்டரிடமிருந்து பணத்தைப் பறித்தனர்!

[வவனியா]

பஸ்ஸை மறித்துக் கண்டக்டரிடமிருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பிலிருந்து கொக்கிளாய் சென்று அங்கிருந்து முல்லைத்தீவ நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸை கொக்குத்தொடுவாய் என்ற இடத்தில் மறித்து இந்தக் கொள்ளை நடாத்தப்பட்டிருக்கிறது.

நான்கு இளைஞர்கள் பஸ்ஸை மறித்து 737 ரூபாவை பஸ் கண்டக்டரிடமிருந்துபறித்துச் சென்றனராம்.

பஸ்கண்டக்டர் இது சம்பந்தமாக முல்லைத்தீவு பொலிசில் புகார் செய்துள்ளனர்.

## வாசுதேவா கைது

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைக் கழகச் செயலாளர் இரா. வாசுதேவாவை, இராணுவத்தினர் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்றுக் காலை இரா. வாசுதேவா கைதுசெய்யப்பட்டார்.

ஒரு வாரத்துக்கு முன்னரும் வாசுதேவா விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## சர்வோதய சீட்டிழுப்பு முடிவுகள்

வட மாகாண சர்வோதய இயக்கத்தினரால் 01-11-1982 அன்று மாலை 7 மணிக்கு கிளிநொச்சி யோகர் சுவாமி திருவடி நிலையத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 5-வது சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்கள் பரிசுக்குரியவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

1-ம் பரிசு 22386
(கவசாக்கி 90 CC மோட்டார் சைக்கிள்)
2-ம் பரிசு 05610
(நீர் இறைக்கும் இயந்திரம்)
3-ம் பரிசு 08501
(சிங்கர் தையல் மெஷின்)
4-ம் பரிசு 22957
(ஏஷியா ஆண்கள் துவிச்சக்கரவண்டி)

ரூபா 250/- பெறுமதி கொண்ட ஆறு ஆறுதல் பரிசுகள்:

| | | |
|---|---|---|
| 05768 | 11041 | 07582 |
| 24426 | 24431 | 22878 |

★ மூன்று மாதங்களுக்குள் பரிசு கோரப்படாவிடில் பரிசுச்சீட்டு செல்லுபடியற்றதாகும்.

5628

## உணவு முத்திரைத் திட்டம் நீக்கப்படுமா?

### 'சிவா' எழுப்பிய சந்தேகம்; இல்லை என்கிறார் 'றொனி'

கொழும்பு

"உணவுமுத்திரைகள் திட்டம் தொடர்ந்து செயல்படும் உணவு முத்திரைத் திட்டத்தை அரசு ரத்துச்செய்யுமானால் நான் எனது பதவியை ராஜினாமா செய்து விடுவேன்" என்று நிதி அமைச்சர் திரு. றொனிடிமெல் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு சபாநாயகர் ஜனப் பாக்கீர் மாக்கார் தலைமையில் கூடியது.

உணக்குப் பணமதிப்பீட்டை பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் சமர்ப்பித்து உரையாற்றினார்.

ஒரு கட்டத்தில் நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம், "உணவு முத்திரைகளை அரசு நீக்கிவிடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. இப்பயத்தைநீக்க, நிதி அமைச்சர் சரியானவிளக்கமும் உறுதியும் அளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளிக்கும் போதுதான் நிதி அமைச்சர் திரு. றொனிடிமெல்மேற்கண்டவாறு கூறினார்.

திரு எம். சிவசிதம்பரம் தொடர்ந்துபேசுகையில் 'நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமாகிக்கொண்டு செல்கிறது. இன்று இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கு வாக்குப்பண மதிப்பீடு (மினி பட்ஜட்) போன்று முன்னர் ஒருபோதும் மதிப்பீடு சமர்ப்பிக்கப்படவில்லை" என்றார்.

[8-ம் பக்கம் பார்க்க]

THINKING COMPUTERS?
— Starting in November —
COMPUTER PROGRAMMING
by American qualified lecturer
—Use our computers from the first week—
★ SCHOLARSHIPS FOR THE BEST FIVE ★
Write for free brochure to
SOFTWARE CONSULTANCY,
427, Temple Road, Nallur, Jaffna.
(4997)

# வரி விளம்பரம்

## தேவை

அனுபம் வாய்ந்த பைண்டர் தேவை. நேரில் வ ர வு ம். சித்ரா அச்சகம், 310, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(5002)

மணிக்கூடு பழுது பார்ப்ப தில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. சாந்தி ரேடர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, (பஸ் நிலையம் அருகாமை), சுன்னுகம். (5013)

## விற்பனைக்கு

இறக்குமதியான கை ச ஞ பிரிண்டிங் புதிய மெசின்கள் பிளேட்டின், ஸ்ரொப் சிலிண் டர் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். சி வா பிறிண்டேர்ஸ், கண்டிவீதி, கைதடி. (4999)

முதல் சொ ந் த க்காரரின் பாவிப்பில் நல்ல நிலையில் உள்ள பஜாஜ் ஸ்கூட்டர் வி ற் ப னை க கு ண் டு. P. M. சர்மா, "துளசி", சிவன்கோவில் வீதி, சாவகச் சேரி. (5012)

யாழ்ப்பாணம் கே.கே எஸ். ரோட் இல. 735, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு முன்பாக இருக்கும் கடை விற்கப்படும். விபரங்கட்கு தொடர்புகொள் ளவும். 25. ஆடியபாதம்ரோட். கல்வியங்காடு, நல்லூர். 4977

## பயிற்சி

றேடியோ – டெலிவிசன் ஏயர்கொண்டிசனிங் Hotel management, Spoken English, French சனி, ஞாயிறு காலை, மாலை நேர வகுப்புக் கள் ஆரம்பம் 07 – 11 – 82 விபரங்களிற்கு நேரில் வரவும். The School of Computer Studies 52/1 கனகரத்தினம் பில்டிங் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல் மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5020

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 17-ம் திகதி
புதன்கிழமை
(3—11—82)

மேடம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதா வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். செய் தொழிலா லும் இன்று சிறப்புண்டாம்.

இடபம்: உற்சாகமாகநாளை ஆரம்பிப்பீர்கள், தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும். வெளியிடத்தில் வரவேற்கத் தக்க செய்தி கிடைக்கும்.

மிதுனம்: இலட்சியப்பாதை யை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள்வரவும்கிடைக்கலாம். இன்று தாராளமான நாள்.

கடகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையா கிவிடும், உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

சிங்கம்: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும். உம் மிடம் உதவி பெற்றவர்களே கையை விரிப்பார்கள்.

கன்னி: வார்த்தை ஜாலம் செய்வதின் மூலம் மற்றவர் களை வசீகரிப்பீர்கள். எழுத் தாளருக்குச் சிறப்பானதினம். இருக்கும் இடத்தில் ஆதரவும் பெருகும்.

துலாம்: அன்னியரின் சக வாசம் சங்கடத்தில் மாட்டி

(7-ம் பக்கம் பார்க்க)

எங்கள் வியாபாரத்தில் உங்கள் பங்குகளுக்கு
ஒரு வருடத்திற்கு 28% வட்டியும்
இலாபத்தில் 2% வட்டி மேலதிகமாககிடைக்கும்

| | | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|---|
| 1000/- | 5000/- | 24% | 26% |
| 5000/- | 25000/- | 2[illegible]% | 27% |
| 25000/-க்கு மேல் | | 26% | 28% |

JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீனசந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்
போன்: 23698

# மன்னர் மாவட்ட இளம் விவசாயிகள் போட்டி

(மன்னர்)

மன்னர் மாவட்டத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினல் இம்மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை நடத்தத்படும் இளம் விவசாயிகளுக்கானவிவ சாயப் போட்டியில் 40 இளை ஞர், யுவதிகள் கலந்து கொள் வார்கள்.

மன்னர் மாவட்டத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினல் நடத்தப்படும் இப்போட்டிக் கான உதவிகளை மன்னர் விவ சாய அலுவலக உத்தியோகத் தர்கள் வழங்குவார்கள்.

இப்போட்டியில் வெற்றி யீட்டும் இளம்விவசாயிகளுக்கு முதலாவது பரிசாக 500 ரூபா வும், இரண்டாவது பரிசாக 250 ரூபாவும், மூன்ருவது பரி சாக 100 ரூபாவும் வழங்கப் படும்.

இத்துடன் முதலில் வெற்றி யீட்டும் 10 இளம் விவசாயிக ளுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கப்படும்,

மன்னர் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினல் நடத்தப்படும் இவ்விவசாயப் போட்டியில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர் தேசிய இளைஞர் சேவைமன்றத்தினல் அகில இலங்கை ரீதியில் நடத் படும்விவசாயப்போட்டியிலும் கலந்துகொள்வார்கள்.

அகிலஇலங்கை ரீதியில்நடத் தப்படும் விவசாயப் போட்டி யில் முதலிடத்தைப் பெறும் இளம்விவசாயிக்கு 2500 ரூபா பரிசும் நற்சான்றிதழும் வழங் கப்படும். (அ)

1983 **Examinations**

CITY and GUILDS:
Electrical Engineering – Part I, II and III.

AUTO ELECTRICIANS:
U. K. and U. S. A. Certificates.

By V. Satchithananthan,
U. K. Qualified and Trained.
Ex. Senior Training Specialist
(American Oil Co)

P. M. G. – SHIP RADIO OFFICERS:
Special and General Certificates
June and October 1983

By K. Rajaratnam.
Retired Chief Colombo Radio,
Ship Radio Officer with wide teaching experience

Courses with practical facilities using modern technics and equipment.

COMMENCING: 20-11-1982.

**Imperial Institute Technology**
K. K. S. ROAD,
TELLIPPALAI. 5021

பழம் பிள்ளையார் ரவல்ஸ்

வழங்கும்

★ காங்கேசன்துறை ★ யாழ்ப்பாணம்
★ மாத்தளை ★ கண்டி

பிரத்தியேக பஸ் சேவை

மேற்படி பஸ் சேவை 5-11-82 முதல் காங்கேசன்துறைக்கும்
- கண்டிக்கும் - யாழ்ப்பாணம் - வவுனியா
- கெக்கிராவ - டம்புல்ல - மாத்தளை ஊடாக தினசரி
செயலாற்றும். இதன்மூலம் கண்டிக்கும்
யாழ்ப்பாணத்துக்குமிடையே ஒழுங்கான
நேரடி சேவையைத் தருகிறோம்.

நேரசூசி

| புறப்படல் | | சேரல் | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | —மு. ப. 4-45 | மாத்தளை | —12-30 பி. ப. |
| யாழ்ப்பாணம் | —மு. ப. 5-30 | | |
| வவுனியா | —மு. ப. 9-00 | கண்டி | — 1-30 பி. ப. |
| கண்டி | —மு. ப. 6-00 | யாழ்ப்பாணம் | —பி. ப. 2-30 |
| மாத்தளை | —மு. ப. 7-00 | காங்கேசன்துறை | —பி. ப. 3-00 |

கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | — | கண்டி | ரூபா 53/- |
| யாழ்ப்பாணம் | — | கண்டி | ரூபா 50/- |

ஆசனம் பதிவுசெய்யுமிடங்கள்

| காங்கேசன்துறை | யாழ்ப்பாணம் | கண்டி |
|---|---|---|
| காங்கேசன் ரவல்ஸ் | ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ் | செல்வன் கபே |
| காங்கேசன்துறை. | நவீன சந்தை, | பேராதனை வீதி, |
| தொலைபேசி: 34. | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | கண்டி |
| | தொலைபேசி: 22660. | தொலைபேசி: |

[5007]

## பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மாவட்ட மன்று, மல்லாகம்
வழக்கு இல. பணம்: 3038

1. பூதப்பிள்ளை காசிலிங்கம்,
2 பெண் நாகம்மாவும் இருவ நம்
பலாலி தெற்கு, வசாவிளான் — வழக்காளிகள்

எதிராக

மார்க்கண்டு தருமராசா,
விமான நிலையச் சந்தி,
பலாலி தெற்கு, வசாவிளான், — எதிராளி

மல்லாகம் மாவட்ட மன்றில் பணம் / 3038–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின் ஞல் விபரிக்கப்படும் காணியை 1982ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் திகதி (25–11–82) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபாய் 2000/- (இரண்டாயிரம்)மும் இன்னும் 31-5-1979 தொடக்கம் முழுமையாக இறுக்கும் வரையும் சட்டவீதமான வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியையும் வழக் குச் செலவும் ரூபா 550–37½ சதம் (உறுதிச் செலவு 258–87½) நிறைவேற்றும் செலவு ரூபா 148–87½ முன் அமையும் செலவு ரூபா 142–62½)

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி யிறை 'கிழானை' பர. நில. இலா. குளி 10 25 பத்து தசம் இரண்டு ஐந்து (பர. நில. இலா குளி 10 25) இது 28–4–71–இல் உலாந்தா சி. சி. குமாரசாமியால் அளந்து வரையப்பட்ட 770, ஏ இலக்கப் படத்தில் 3ம் துண்டாக விபரிக்கப்பட்டுள் ளது. இதற்குள் அடங்கிய வீடும், பயிர்வகைகளும், இந்தக் குளி பத்து தசம் இரண்டு ஐந்துக்கும் எல்லை கிழக்கு: 2ம் துண்டாகிய காசிலிங்கத்துக்கும் பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனம். வடக்கு: தம்பையா கந்தையாவின் ஆதனம் மேற்கு: குறித்த படத்தில் 1ம் துண்டாகிய காசிலிங்கத்துக் கும் பெண் நாகம்மாவிற்கும் உரிய ஆதனம். தெற்கு குறித்த படத்தில் 4ம் துண்டாகிய பாதை நிலம் இன்னும் குறித்த 4–ம் துண்டாகிய பாதையால் மேற்கேயிருக்கும் பலாலி ரோட் டுக்குப் போக்குவரவு செய்யும் ஒழுங்கைப் பாவிப்புரித்தும் இதடங்கலிற் சொரியலாய் மூன்றிலொரு 1/3 பங்கும் அதற் குச் சேர்ந்தவைகளும்.

சு. வ. கணேசன்,
(ஒப்பம்)
பிஸ்கால்

மாவட்ட மன்று,
மல்லாகம். 14-10-82 5022

## "இஸ்ரேல் - லெபனுன் யுத்தத்தில்

# இஸ்ரேலுடன் ஒத்துழைத்த லெபனுனியர் பிரஜாவுரிமைபறிக்கப்படும்"

## அந்நாட்டு பிரதமர் அறிவிப்பு

பெய்ரூட் நவ 2

இஸ்ரேல் – லெபனுன் யுத்தத்தின்போது இஸ்ரேலுடன் ஒத்துழைத்த தமது நாட்டவர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்படுமென்று லெபனுன் பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் காரணமாக லெபனுன் நிர்வாகம் சீர் குலைந்துள்ளதாகவும், தேசிய ரீதியில் பெரும் கஷ்டங்களை லெபனுன் மக்கள் அனுபவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

லெபனுன் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் பீதி நிலவி வருவதாகவும், வீதிகளில் நடமாட மக்கள் அஞ்சுவதாகவும் தெரிவித்த அவர் லெபனுனின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

லெபனுனின் பொருளாதாரத்தை சீர்ப்படுத்துவதற்காக அமெரிக்காவிடம் நிதியுதவி கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டார். [வெ)

## தலைமன்னர்-ராமேஸ்வரம் புதியகப்பல் சேவை

மன்னர்)

மன்னர் மாவட்ட அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தலைமன்னருக்கும், ராமேஸ்வரத்திற்கு மிடையில் கப்பல்சேவை ஒன்றை நடத்துவதற்கு ஓசானிக் என்னும் கம்பனிமுன்வந்துள்ளது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மன்னர் மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் உரையாற்றிய சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

தலைமன்னருக்கும், ராமேஸ்வரத்திற்குமிடையில் கப்பல் சேவையொன்றை நடத்துவதற்காக 'ஓசானிக்' கம்பனி கப்பல் ஒன்றை வாங்கியுள்ளது.

இக்கப்பலில் 600 பிரயாணிகள் ஒரே தடவையில் பிரயாணம் செய்யமுடியும்.

தலைமன்னருக்கும், ராமேஸ்வரத்திற்குமிடையில் மன்னர் மாவட்ட அபிவிருத்திசபையால் கப்பல் சேவை ஒன்றை நடத்த அனுமதி தருமாறு போக்குவரத்து அமைச்சையும் கப்பல்துறை அமைச்சையும் கேட்கப்பட்டுள்ளது.

தலைமன்னருக்கும், ராமேஸ்வரத்திற்குமிடையில் மன்னர் மாவட்ட அபிவிருத்திசபை கப்பல் சேவை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சிடமே

[ . ம் பக்கம் பார்க]

## "பாராளுமன்ற பதவிக்காலத்தை நீடிக்கும்

# சர்வஜன வாக்கெடுப்பு டிசம்பரில் நடைபெறும்"

## பிரதம மந்திரி கூறுகிறர்

[கொழும்பு]

"அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு அளிக்கும் பாராளுமன்றம் தொடர்ந்து பதவியிலிருப்பது அவசியம். இதற்காகவே பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்காக சர்வஜனவாக்கெடுப்பு அடுத்த மாதம் நடைபெறும்."

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா மகரத்தொகுதியில் மாதிரிக் கிராமமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் போன்று உலகில் எந்தவொரு தலைவரும் இரண்டாவது தடவையாக வெற்றிபெறவில்லை. ஜனதிபதி தேர்தலில் அவர் 139 தொகுதிகளில் வெற்றியீட்டியுள்ளார்.

"1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது அளித்த ஆதரவை மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின் போதும் எமக்கு அளிக்கவேண்டும்.

"பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பது குறித்து மக்களின் அனுமதியைப்பெற ஜனதிபதி முன்வந்திருக்கிறர். இது ஜனநாயக ரீதியான நடவடிக்கையாகும். முன்னைய அரசாங்கம் இரண்டு வருடகாலம் ஆட்சியை மக்களின் அனுமதியின்றி நீடித்ததை இதனுடன் ஒப்பிட முடியாது.

"இந்த அரசு மக்கள் மீது பூரண நம்பிக்கை கொண்டுள்ளது. ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மதிநுட்பம் மிக்க திறமையால் நாட்டில் இடம்பெறவிருந்த பயங்கரமான சூழ்நிலை தவிர்க்கப்பட்டது" என்றர்.

(வெ]

## விலைக்கட்டுப்பாட்டு சட்டம் நீக்கம்

பாரிஸ் நவ 2

கடந்த நான்கு மாதங்களாக பிரான்ஸ்சில் அமுலிலிருந்து வந்த விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

இதனுல் அங்கு பாண், மரக்கறி வகைகள், பெற்ரோல் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீட்டு வாடகையிலும் அதிகரிப்பைச் செய்ய குடியிருப்பாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. [வெ]

## நெடுங்காலப்பயிற்சி நடனக்கலைக்கு அவசியம்

### பி.பி.ஸி. தமிழோசையில்சுவர்ணமுகி

லண்டன், நவம்பர் 2

பரதநாட்டியத்தில் கர்ணங்களில் பிரசித்திபெற்ற நர்த்தகி குமாரி சுவர்ணமுகியுடன் வரும் 11ம் திகதி வியாழக்கிழமை ஒலிபரப்பாகவிருக்கும் பி.பி. ஸியின் தமிழோசை நிகழ்ச்சியில் திரு. சுந்தரலிங்கம் நடத்திய பேட்டி இடம் பெறுகிறது.

சுவர்ணமுகியின் தந்தையார் சம்பதி பூபால் அவருக்கு நான்கு வயதிலிருந்தே கோவிற் சிற்பங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள முத்திரைகளையும் 108 வகைக் கர்ணங்களையும் கற்றுக்கொடுத்தார். இந்த கர்ணங்களுட் சில வெறும் அப்பியாச வித்தைகள்தான் என்றும், பெண்களுக்கு உகந்தவை அல்ல என்றும் சிலர் கருதுகிறர்கள்.

இப்போது தமிழ்நாடு அரச நர்த்தகியாக இருக்கும் குமாரி சுவர்ணமுகி அண்மையில் லண்டனில் இரண்டு நடனக் கச்சேரிகள் நடத்தினுர். அப்போது அவர் அளித்த பேட்டியில் கர்ணங்களைப்பற்றி விளக்கினுர். நடனக் கலையைக் கற்பதற்கு நெடுங்காலப் பயிற்சியின் அவசியத்தையும் வற்புறுத்தினுர்.

இந்தப் பேட்டியை நவம்பர் 11ம் திகதி வியாழக்கிழமையன்று பி.பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சியில் கேட்கலாம். இது இந்திய இலங்கை நேரப்படி இரவு 9-45 முதல் 10-15 வரை 11 . 955, 7 . 18, 6.165 மெகஹேர்ட்ஸ் அதாவது 25, 41, 49 ஆகிய மீட்டர்களில் ஒலிபரப்பாகிறது.

## பாக். செல்லும் இந்திய கிரிக்கெட்குழு

புதுடில்லி நவ 2

பாகிஸ்தானுக்கு செல்லவுள்ள இந்திய கிரிக்கெட் குழு அங்கு பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியுடன் ஆறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்திய கிரிக்கெட் குழுவிற்குகாப்டனுக சுனில் கவாஸ்கர் நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (வெ)

### மன்னர்மாவட்டத்தில்

## பனம் பொருள்உற்பத்திப் பொருட்கள் தேக்கம்!

மன்னர், நவ. 1

மன்னர் மாவட்டத்திலுள்ள பனம்பொருள் உற்பத்திநிலையங்களில் உற்பத்திசெய்யப்பட்ட பெருந்தொகையான உற்பத்திப் பனம்பொருட்கள் தேங்கிக் கிடக்கின்றன. இதனுல் புதிய பனம்பொருள் உற்பத்திநிலையங்களைத் திறக்க முடியவில்லை,

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மன்னர் பிரதே சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மன்னர் மாவட்டத்திலுள்ள பனம்பொருள் உற்பத்திநிலையங்களில் உற்பத்திசெய்யும் பொருட்களை பனம்பொருள் அபிவிருத்திசபை வாரத்திற்கொருமுறை கொள்வனவு செய்யுமென ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனுல், பனம்பொருள் அபிவிருத்திசபை மாதத்திற்கு ஒருமுறை மட்டும் வந்து உற்பத்திப்பொருட்களைக் கொள்முதல் செய்துகொண்டு செல்கின்றது.

ஒரு வானில் மாதத்திற்கு ஒருமுறை மட்டும் வந்து உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்வதால் ஒரு பனம் பொருள் உற்பத்திநிலையத்திலுள்ள உற்பத்திப் பொருட்களே கொள்முதல்செய்யப்படுகிறது.

இதனுல் ஏனைய பனம் பொருள் உற்பத்திநிலையங்களில் பெருந்தொகையான உற்பத்திப் பொருட்கள் தேங்கிக்கிடக்கின்றன.

இத்துடன் பனம்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோரின் தொகையும் குறைந்துவருவதுடன் புதிய பனம்பொருள் உற்பத்திநிலையங்களைத் திறக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பனம் பொருள் அபிவிருத்திசபை தலைவருடன் தொடர்பு கொண்டு மன்னர் மாவட்டத்திலுள்ள பனம்பொருள் உற்பத்திநிலையங்களில் உற்பத்தி செய்யும் பொருட்களை உடனுக்குடன் கொள்முதல்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்பின் மன்னர் பகுதியில் புதிய பனம்பொருள் உற்பத்திநிலையங்களை ஆரம்பிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

இவ்வாறு மன்னர் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## அர்ச்சகர் விடயம்

சென்னை நவ 2

ஆலயங்களில் அனைத்து வகுப்பினரையும் அர்ச்சகராக்கும் விடயத்தைஅரசியலுடன் கலக்கக் கூடாதென்று தமிழ்நாடு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்துள்ளார்.

இதனை உள்ளூரவர்களின் முடிவுக்கு விடவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

[வெ)

## வளரும்நாடுகளும் புதிய அணுகு முறையும்'

புதுடில்லி, நவ, 2

"வளரும் நாடுகளுடனை ஒத்துழைப்பில் புதிய அணுகுமுறையை ஐரோப்பிய பொருளாதார சமூகம் கைக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய பொருளாதார சமூகப் பிரதி நிதிக்கு அளித்த விருந்து பசாரத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்குதொடர்ந்துபேசுகையில் "இந்தியாவும், ஐரோப்பிய பொருளாதார சமூகமும் பரஸ்பரம் ஒத்துழைப்பைப் பெருக்கிக் கொள்ளும். அத்துடன் உணவுப்பிரச்னை, எரிபொருள் பிரச்னையை அசட்டைசெய்ய முடியாதென்றும் கூறினர். [வெ)

### வெளிநாடுகளிலுள்ள

# பங்களாதேஷ் பிரஜைகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை

டாக்கா நவ 2

வெளிநாடுகளில் அரசாங்கத்தின் அனுமதியின்றி இருக்கும் 164 பேருக்கு எதிராக பங்களாதேஷ் அரசு வழக்குத் தொடரவுள்ளது.

இவர்கள் நாடு திரும்பி கடமைகளைப் பொறுப்பேற்றல் தண்டனை நீக்கப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அரசின் புலமைப் பரிசில்களைப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும், பல்கலைக்கழக பேராசிரியர்களும் நாடு திரும்பாது தொடர்ந்தும் வெளிநாடுகளிலிருந்து வருவதையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் அரசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனுல் நாட்டில் கல்வித்துறையும், நிர்வாக சேவையும் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

### மணிவாக்கு

பணக்காரனுக்கு மோட்டர்கார் இருக்கிறது; கிராமத்திலும் நகரத்திலும் சொத்துக்கள் உள்ளன; விலையுயர்ந்த சுருட்டுப் பிடித்தவாறு அவன் விதியைக் கேலி செய்கிருன்.

—ப்ராங்லின் பியர்ஸ் அடம்ஸ்

# நமது நோக்கு

## ஒற்றுமைப்பட்ட எதிர்க் கட்சிகள்?

அறநெறியும் அறிவுத்திறனும் அரசியல் தலைவருக்கு உண்டானுல் அவரால் சாதிக்க முடியாததெது? இவ்வித அபூர்வ மனிதர்கள் சரித்திரத்தில் இல்லாமலில்லை.

இங்கிலாந்தில் சோஷலிசவாதியாகப் பிரபலம் பெற்றவர், அந்த நாட்டின்பிரதமராக வருவாரென்று எதிர்பார்க்சப்படுமளவில்திறமை பெற்ற சேர் ஸ்ரவட் கிறிப்ஸ் (Sir Stafford Cripps ஒருகிறீஸ்தவபக்தர்

இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பது பற்றி 2-வது உலக யுத்த முடிவில் பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசு இந்தியாவுக்கு அனுப்பி வைத்த பெரியவர் இவர். ஆங்கில சோஷலிசத்தின் தந்தை தாய் என்று கணிக்கப்படும் சிட்னி வெப் திருமதி பியாற்றிஸ் வெப் அவர்களின் மருகன்; எளிய வாழ்க்கை; மது மாமிச மற்ற சுத்த உணவு நாட்கொருமுறை; தாமே சமையல் செய்வதில் நம்பிக்கை கொண்டவர். சிக்கனத்தின் சின்னம் அவர்.

தமது வருமானத்தை செலவு செய்வதின் இரகசியம் எத்தனை பேருக்குத் தெரியும்? வறிய பிள்ளைகளில் தராதரம் பெற்றவர்களுக்கு பல்கலைக்கழகப் படிப்பின் செலவைஉபகரிப்பதே.

சோஷலிசம், பேச்சில், ஏட்டில், தரம் உயர்ந்த விவாதங்களில், வளர்ச்சியடையமாட்டாது;இவ்வித உதாரண வாழ்வு மக்கள் எழுச்சிக்கு இன்றியமையாதது.

தியாகமென்ற சொல்லைத்தானும் பல சோஷலிசவாதிகள் இந்த நாட்டில் தப்பாக உபயோகிப்பதை நாம் காண்கின்றோம்.

ஒரு நல்ல ஆட்சியின் பொறுப்பு, மனித சொத்தையல்ல, மனித வாழ்க்கையை மேம்படுத்துவதில் தங்கியிருக்கிறது. செல்வர்களுக்குச் சினம்பிடிக்கவைக்கும் கோட்பாடு இது.

காணி நிலம், வீடு நல்வாழ்வுக்கு அவசியம்தான்; எனினும் பசி வந்தால் பத்தும் பறந்துபோம்.

மனித வாழ்வின் மேன்மை என்று குறிப்பிடும்போது மனிதனின் ஆத்மீக வாழ்க்கை சாதாரண மனிதனின் சிறப்பு சமுதாய அடிப்படையில் அவனுக்கு அளிக்கும் மதிப்பு சமூகத்தில் சமனுக எவனையும் கருதும் பண்பு— சேர் ஸ்ராப்வுட் கிறிப்ஸ் போதித்துச் சாதித்த கிறீஸ்தவ அடிப்படைப்போதனை.

எனவே சோஷலிசம் ஒரு பயங்கரமான கொள்கையென்றும் மதபோதனைக்கு மாறுனதென்றும் அமெரிக்கா போன்ற செல்வந்த நாடுகள் கருத வேண்டியதில்லை; பணக்காரவர்க்கத்தை ஒழித்துக் கட்டுவதென்ற போக்கு பயனற்றது.

நாமிந்த பாடத்தை ஒரு பெரிதாக எல்லாம் வல்ல அமெரிக்காவிற்கு உதவ எழுதவில்லை; சோஷலிசம் என்ற கோட்பாடு, பலநாடுகளில், பல தோற்றங்கள் எடுத்திருக்கின்றன. கோர தோற்றங்களால் கவரப்பட்டு 'புரட்சி' பற்றித் தொண்டை கிழியக் கத்திய இடதுசாரித் தலைவர்கள் தங்கள் போதனை எவ்வாறிருந்தாலும் தனிப்பட்ட வாழ்வின் சாதனையால் இந்த நாட்டு மக்களைக்கவர முடியவில்லை என்பது இந்நாட்டின் இன்றைய நிலை; இதற்குப் புற நடையில்லாமலில்லை.

தம் சொந்த வாழ்வை, அறநெறியென்ற அத்திவாரத்தில் அமைத்து, அறிவுத்திறனுல் மக்களைக் கவர்ந்த இடதுசாரித் தலைவர்களை இந்நாட்டில் நாம் விரல் விட்டு எண்ணலாம்.

அரசியல் பொறுப்பு கிடைத்த போதும் அவர்களின் சாதனை சித்திபெறவில்லை. இதனை முடிவாகக் கொண்டு இடதுசாரிச் சித்தாந்தம் (Leftism) இந்த நாட்டில்செயற்படமாட்டாதெனத் தீர்ப்பளிப்பது பெருந்தவறு.

இயற்கைக்கு மாறுன இவ்வித முடிவு தப்பானதென்பது செல்வநாடுகள் கற்பிக்கும் உண்மை. விருத்தியடைந்த நாடுகளில் சோஷலிசத்தை ஆதரிக்கும் கூட்டம் பெருகிவருகிறது.

46 ஆண்டுகளாக பிராங்கோ வலதுசாரிச் சர்வாதிகாரத்துக்குக் காட்பட்ட ஸ்பானிய மக்கள் இன்று பெரும்பான்மை சோஷலிச அரசை நிறுவப் போகின்றனர். வாழ்க்கைத் தரத்தில் சிறந்த பிரான்ஸ் சோஷலிச தலைமையைஆதரித்திருக்கிறது.

எங்கள் நாட்டில் சோஷலிச அடிப்படையில் ஓரளவுக்காவுதல் பொது மக்கள் விவசாயிசன் கவனத்தை ஈர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடு ஏகாதிபத்தியவாதிகளின் பிடியிலிருந்து நீங்க வேண்டுமென்றுதணிந்து பல நடவடிக்கைகள் எடுத்ததை மக்கள் இலகுவில் மறக்கமாட்டார்கள்.

அக்கட்சியின் சோஷலிசக்குரல் 'கரகரக்கத்' தொடங்க, அதன் ஆட்சியும் கவிழ்ந்தது. தெளிவான பாதையை மக்களுக்கு விளக்கி, தீவிரமான செயல்களால் பொதுமக்களை சிறப்பாகத் தமிழ் மக்களை பீதியடையப்பண்ணும்பழக்கத்தைக் கைவிட்டு சாதாரண மனிதனின் மேம்பாட்டுக்கு உழைக்கும் பொறுப்பே தமது என்ற உரிமையைப் பாதுகாத்திருந்தால் இன்று அதற்குண்டான பொதுமக்கள் போஈதரவு இவ்வளவு குறைந்திருக்க நியாயமில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 'கெடுகிறேன் பந்தயம் பிடி'' என்றுல் எமக்கென்ன கவலை? அதுவும் 'தனிச்சிங்களம் 24 மணித்தியாலங்களில்' என்று ஒரு பகுதி மக்களை மயக்கவும் இன்னெரு பகுதியைவெறுக்கவும் வைத்த கட்சி.

ஆனுல் இந்த நாட்டில் நீண்டகாலம் பொது மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய தேசியக் கட்சியாய் உள்ளது இது.

நாட்டுக்கு எதுவிதஎதிர்ப்புமின்றி ஒற்றை ஆட்சி— சிங்கப்பூர் பாணியில்— இங்கும் தோன்றலாமென்ற அச்சம் மக்கள் மனதில் பரவி வருவதற்கு இடமுண்டு.

குறிப்பாக பாராளுமன்ற பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து சகல எதிர்க்கட்சிகளையும் அழைத்து கடுமையான முறையில் அரசுக்கு எதிராக பொது அமைப்பு உருவாக்க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவுசெய்திருப்பது பொருத்தமானது. இவ்வித எதிர் அமைப்பு இன்று அவசியமானது.

---

தமிழ்மொழிக்கு

# கிடைத்த உரிமையையாகிலும் பயன்படுத்துகின்றேமா?

த. மனேகரன்

(பொதுச் செயலாளர் – அ. இ. இந்து வாலிபர் சங்கம்)

தமிழ் மொழிக்கு அரசியல் திட்டத்தில் தேசிய மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனுல் நடைமுறையில் அது செயல்படுவதில்லை என்று தமிழ் மக்கள் குறைபடுவது வழமையாகிவிட்டது. தமிழ் மொழிக்கு தமிழ்மக்கள் அன்றுட வாழ்வில் எந்த அளவு அந்தஸ்து வழங்குகின்றுர்கள் என்பது ஆராய்வின் போதுகவலைதருவதாயுள்ளது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரை தமிழ்மக்களில் 20%த்தினர் மட்டுமே தமது அரசாங்கத்தொடர்புகளைத் தமிழ் மொழியில் கொள்கின்றுர்கள் என்று புலனுகியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் பெவரளவிலாவது நாட்டின் சகல பகுதிகளிலும் தமிழர் தமிழில் அரசுடன் தொடர்பு கொள்ளச்சட்டம் இடமளிக்கின்றது.

தமிழ் மொழிக்கு வாழ்வளிக்கவேண்டிய தமிழர்களே தமிழ்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலத்தில் தமது அன்றுடக் கடமைகளையும், அரசாங்கத் தொடர்புகளையும் மேற்கொண்டால் தமிழ் மொழிதான் வாழுமா? தமிழின் உரிமைதான் நிலைநாட்டப்படுமா? இதனைத் தமிழ் மக்கள் ஏன் உணர்கின்றுர்களில்லை?

ஒரு தமிழ் மகன் தனது அன்றுடக் கடமைகளைத் தமிழ் மொழியில் மேற்கொள்ளும் போது தமிழ் மொழியில் உரிமை நிலைநாட்டப்படுகின்றது என்பதை உணரவேண்டும்.

இன்றைய உண்மைநிலையென்ன? பெரும்பாலான தமிழ் மக்கள் ஆங்கிலத்திலேயே அரசாங்கத் தொடர்புகளை மேற்கொள்வதுடன் தமது சாதாரண கடமைகளையும் ஆற்றுகின்றனர். நூற்றுக்கு நூறு வீதம் என்று கூறக்கூடிய அளவில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கடமை புரியும் தமிழ் மாவட்டமான யாழ்ப்பாணத்தின் நிலையை நோக்குவோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும்போது அதன் முகவரியை ஏன்தான் ஆங்கிலத்தில் எழுதுகின்றுர்களோ தெரியவில்லை? அதே போல் யாழ். மாவட்டத்திற்குள்ளேயே தந்தி, அஞ்சல் கட்டளை, காசுக்கட்டளை, பதிவுத்தபால் போன்றவற்றிற்குத் தமிழைப் பாவிப்போர் மிகக் குறைந்த வீதத்தினரே.

ஒவ்வொரு தமிழரும் தமிழ் மொழியில் தமது அன்றுடக் கடமைகளையும் அரசாங்கத் தொடர்புகளையும் மேற்கொள்வது என்று முடிவெடுத்தால் தமிழ்மொழிக்கு வாழ்வளிக்கும் பெருஞ் செயலைச் செய்தோராவோம்.

தமிழ்மொழியை விட ஆங்கிலத்தில் அரசாங்கத் தொடர்பு கொண்டால் அதற்கு ஆற்றல் அதிகம் என்போரும் இல்லாமலில்லை. தமிழின் வாழ்வும் வளமும் தமிழரின் உயிர் மூச்சு என்று முழங்குவதுடன் நின்றுவிடாமல் ஒவ்வொரு தமிழ்மகனும் தனது அன்றுடக் கடமைகளையும், அரசாங்கத் தொடர்புகளையும் தமிழ் மொழியிலேயே மேற்கொள்வது என உறுதி எடுக்கவேண்டும். அரசாங்க அலுவலகங்களில் தமிழில் பதிவுகள் இடம்பெறுவதற்கு உதவியாக தமிழ்மக்களே தமது கடமையை உணர்ந்து செயல்படவேண்டும்.

தமிழ்மொழியின் பயன்பாடு எவ்வளவு அதிகரிக்கின்றதோ அந்த அளவிற்குதமிழ்தெரிந்த அலுவலரின் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்என்ற உண்மையையும் ஒவ்வொரு தமிழரும் நினைவிலிருந்தி தமிழுக்கு வாழ்வளிக்க முன்வரவேண்டும்.

---

# “கல்வி வளர்ச்சியிலேதான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது”

(கரவெட்டி)

'இன்றைய அரசாங்கம் நாட்டின் அபிருவிருத்திக்கே முதல் இடம்கொடுத்துவருகிறது. கல்வி வளர்ச்சியில்தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது.'

இவ்வாறு யாழ். பிரதேச கல்வி அதிபதி திரு. ம. சிமியாம்பிள்ளை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் வகுப்புக்களில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி கல்வி வட்டார ஆசிரியர்களுக்கான இச் சேவைக்காலப் பயிற்சி வகுப்பிற்கு உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் தலைமைதாங்கினுர்.

யாழ். கல்வி அதிபதி திரு. சிமியாம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒழுங்கும் கட்டுப்பாடும் கல்வித்தத்துவத்தின் தவிர்க்க முடியாத கோட்பாடுகளாகும். இவை வருங்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்கு மிக அத்தியாவசியமானவை. இதனையே காலத்திற்குக் காலம் கல்வியமைச்சு வலியுறுத்தியும்வந்துள்ளது.

கடந்த காலங்களில் தென்னிலங்கையிலுள்ள பெற்றோர்கள் தங்கள்பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள புகழ்பெற்ற பாடசாலைகளுக்கு உயர்கல்விக்கு மட்டுமன்றி உயர்ந்த ஒழுக்கத்திற்காகவும் அனுப்பி வந்தார்கள். ஆனுல் துரதிர்ஷ

[8-ம் பக்கம் பார்க்க]

---

## சிறந்த நல்மார்க்கம் தேடு

காரை. செ. சுந்தரம்பிள்ளை

பாம்புக்கு விசத்தை வைத்தான்
பருந்துக்குப் பார்வை வைத்தான்
வேம்புக்குக் கசப்பை வைத்தான்
வேருக்குக் கயரை வைத்தான்
காம்புக்கு இலையை வைத்தான்
கள்ளுக்குப் புளிப்பை வைத்தான்
தேம்பிடும் மனித னுக்குச்
சிந்தையில் நஞ்சை வைத்தான்

மயிலுக்குத் தோகை தந்தான்
மானுக்கு மருட்சி தந்தான்
குயிலுக்கு இனிமை தந்தான்
கொவ்வைக்குச் சிவப்புத் தந்தான்
வயலுக்குப் பசுமை தந்தான்
வனத்துக்கு மரங்கள் தந்தான்
மயலூறு வாழு கின்ற
மனிதர்க்கு மயக்கம் தந்தான்.

பூவுக்கு மென்மை யுண்டு
பூமிக்குப் பொறுமை யுண்டு
பாவுக்கு வரம்பு உண்டு
பாலுக்கு வெண்மை யுண்டு
தீவுக்குக் கரைகள் உண்டு
தேனுக்கு இனிமை யுண்டு
நாவுக்குப் பூட்டில் லாத
நமக்கென்ன பண்பு உண்டு?

விரிந்தபூ மொட்டாய் மாறும்
விந்தையிவ் வுலகில் இல்லை
இறந்தவை எழுவ தில்லை
எரிந்தவை மீள்வ தில்லை
கறந்தபால், கடந்த நாட்கள்
கழிந்திட்ட இளமை யாவும்
திரும்பிடா; ஆகை யாலே
சிறந்தநல் மார்க்கம் தேடு.

# "மிளகாய், வெங்காயத்திற்கு நியாயமானவிலை வேண்டும்"

[புலோலி]

"யாழ் மாவட்ட விவசாயிகளின் முக்கிய உற்பத்திப் பொருட்களான வெங்காயம், மிளகாய் போன்றனவற்றிற்கு நியாயமான விலை சந்தைவசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். இதுசம்பந்தமாக யாழ்.மாவட்ட ஐ. தே. கட்சி அமைப்பாளர்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறி நடவடிக்கை எடுக்க வேண்டியது கடமையாகும்"

இவ்வாறு பருத்தித்துறைத் தொகுதி ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர் திரு. சி.வ. சந்திரசேகரம் புலோலியில் நடைபெற்ற ஐக்கியதேசியக்கட்சிக் கிளைக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். ஐக்கியதேசியக்கட்சிக் கிளைத்தலைவர் திரு கே. வீணுகோபால் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. சந்திரசேகரம் கூறியதாவது;

"தமிழ்மக்களுக்கு திரு. ஜே ஆர் ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வழங்கிய உரிமைகளை எந்த அரசாங்கமும் இதுவரை காலமும் வழங்கவில்லை எனவே தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்

"ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையிலான அரசாங்கத்தின் மூலமே இந்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் எதுவிதவேறுபாடுமற்ற முறையில் அபிவிருத்திநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

"யாழ். மாவட்டத்தில் கடந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க இந்த ஜனதிபதித் தேர்தலில் கூடிய வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இது யாழ்.மாவட்டத்தில் ஐ தே. கட்சி வளர்ந்து வருவதை எடுத்துக்காட்டுகின்றது ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மைத்தமிழ் மக்களுக்கும் முக்கியஇடங்களை வழங்கி வருகின்றது

யாழ் மாவட்ட விவசாயிகளின் முக்கிய உற்பத்திப் பொருட்களான வெங்காயம், மிளகாய் போன்றனவற்றிற்கு நியாயமான விலை தகுந்த சந்தைப் படுத்தல் வசதிகள் என்பன வழங்கப்பட வேண்டும். இதனை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டி ஆவன செய்ய வேண்டியது யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களின் கடமையாகும். இதன் மூலம் இப்பகுதி விவசாயிகளின் குறைபாடு நீக்கப்படும்" என்றூர்.

திரு. வே. சரவணபவானந்தன் உட்பட பலர் உரையாற்றினர். [வெ]

## சவூதி தலைநகர் றியாட்டில்

# ஒரு கம்பெனியில் மட்டும் மூவாயிரம் இலங்கையர்!

(சு. வி. கிருபாகரன்)

(சவூதிஅரேபியா)

சவூதிஅரேபியாவின் தலைநகர் "றியாட்" நகரில், இலங்கையரின் நடமாட்டம் மிகவும்அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் அமெரிக்க கம்பனி ஒன்றுக்கு "றியாட்" நகரின் சுத்திகரிப்பு வேலை ஒப்பந்தம் கிடைத்துள்ளதே.

இக் கம்பனி தமது சுத்திகரிப்பு வேலையை றியாட் நகரில் வெற்றிகரமாக செய்வதற்கு (மூவாயிரம்) இலங்கையரை இங்கு சேவைக்கு அமர்த்தியுள்ளது. இது இலங்கையரைப் பொறுத்தவரையில் ஒரு சாதனை எனலாம். 3000 இலங்கையர் குறிப்பாக ஒரு கம்பனியில் சவூதியில் வேலைசெய்வது குறிப்பிடத்தக்கது, வேறு எந்தக் கம்பனியிலும் இவ்வளவு கூடுதலான இலங்கையர் வேலைபார்க்கவில்லை!

3000 இலங்கையரில் 2000 இலங்கையர் றியாட் நகரின் சுத்திகரிப்புவேலையில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர், இவர்களில் மேற்பார்வையாளர்கள் சாரதிகள், உதவியாளர்கள், சுத்திகரிப்பாளர்கள் என்போர் அடங்குவர். இவர்களை றியாட் நகரின் மூலைமுடுக்குகள் எல்லாவற்றிலும் இரவு பகலாகக் காணக்கூடியதாய் இருக்கிறது. மிகுதி ஆயிரம் இலங்கையரும் கம்பியூட்டரை இயக்குவதற்கும் நிதி நிர்வாகம், மருத்துவ சேவை, உணவு ஆகியவற்றை கவனிப்பதற்கும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

# கதிரவேலுப்பிள்ளை சிலை நிறுவத் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

அறவழிப் போராட்டக்குழுவின் காப்பாளரில் ஒருவரும், மறைந்த கோப்பாய்த்தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் சி, கதிரவேலுப்பிள்ளையின் ஞாபகர்த்தமாக, அறவழிப்போராட்டக்குழு யாழ் நகர்மத்தியில் அவரின் உருவச்சிலையை நிர்மாணிக்க முடிவு செய்துள்ளது.

சிலை நிறுவுவது தொடர்பான பணிகளைக் கவனிக்க அமரர் கதிரவேலுப்பிள்ளை ஞாபகார்த்த சிலை அமைப்புக் குழு" ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழுவில் திருவாளர், இரா. முருகானந்தன், வீ. சு, துரைராஜா, ஆ நடராஜா, க. ஜீவகதஸ், சு. தங்கமயிலோன் ச. சி. அமிர்தலிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். [மா]

## தாயும் மகளும் உள்ளேஇருக்க

# வீடுதீக்கிரையானது

## தொல்புரத்தில் சம்பவம்

[சுழிபுரம்]

தாயும் மகளும் தனித்து வாழ்ந்து கொண்டிருந்த வீடு தீக்கிரையானது. தொல்புரம் வழக்கப்பரை அம்மன் கோவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றே இவ்விதம் தீயினுல் எரிந்தது.

கிருஷ்ணபிள்ளை இலட்சுமிப்பிள்ளையும், அவரது மகளும் இவ்வீட்டில் வசித்து வந்தனர்.

ஏற்கனவே இவ்வீட்டில் திருட்டு நடந்ததாகவும் கூறப்படுகிறது.

நள்ளிரவுக்குச் சற்று முன்னதாக, கதவைத்தட்டி, திறக்கும் படியும் தாங்கள் தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்களென்றும் குரல் கேட்டதாம் ஆனல் உள்ளே படுத்திருந்த தாயும் மகளும் வெளியே வர அஞ்சினராம்,

இதனல் பயந்து நடுங்கிய இருவரும் அபயககுரல் எழுப்பினர்களாம் அப்போது வீடும் தீப்பற்றி எரிந்ததாம் உடுபுடவைகள் தளபாடங்கள் யாவும் எரிந்து சாம்பராகியதாம்.

தெய்வாதீனமாக உள்ளே இருந்த தாயும் மகளும் அயலவாகளால் காப்பாற்றப்பட்டனர்,

பொலிஸார் தீச்சம்பவம் சம்பந்தமாக விசாரணை நடாத்தி வருகின்றனர்,

# நடேஸ்வரா, ஸ்கந்தா வெற்றி

[மாவிட்டபுரம்]

யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஓர் அங்கமாக நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி, வசாவிளான் மகா வித்தியாலயத்தை வென்றது.

மேற்படி இரு கல்லூரிக் கோஷ்டிகளும் 1ம் பிரிவில் மோதிய இப்போட்டியில் நடேஸ்வரா 3: 1 என்ற கோல்களால் வசாவிளான் மகா வித்தியாலயத்தை வென்றது. திரு கணேசலிங்கம் இப்போட்டிக்கு நடுவராக இருந்தார்.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், 1ம் பிரிவில் மோதிய மற்றொரு போட்டியில் ஸ்கந்தா 6–1 என்ற கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு க தனபாலசிங்கம் நடுதராக இருந்தார். இவ்விரு போட்டிகளும் யாழ் விளையாட்டரங்கில் இடம் பெற்றன.

# வல்வெட்டியில் நவராத்திரிவிழா

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டி சனசமூக நிலைய வாசிகசாலையில் நவராத்திரி விழா கடந்த 17ந் திகதி முதல் 26ம் திகதி வரை நவராத்திரி விழாவை கொண்டாடினர். தினமும் நடந்த விழாவினை வல்வெட்டிவாசிகள் சிறப்பாக நடத்தினர். சொற்பொழிவுகள் தினமும் இடம்பெற்றன.

சகலகலா வல்லிப் பாமாலை பண்ணுடன் இசைத்தல்போட்டிகளும நடாதப்பட்டு, பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டன.

வல்வெட்டி சனசமூக நிலையத் தலைவர். திரு. த. முத்துசாமி தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

## பாண் வியாபாரி கொலை

# இரு இளைஞர்கள் கைது

(வவனியா)

பாண் வியாபாரி ஒருவர் கத்திக்குத்துக்குப் பலியாகியுள்ளார் சந்தேகத்தின்பேரில் இரு இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

இச்சம்பவம் சாஸ்திரி கூழாங்குளம் – கல்மடு வீதியில் இடம்பெற்றுள்ளது.

வவனியாவைச் சேர்ந்த ஏழுபிள்ளைகளின் தந்தையான அப்துல்லா (45 வயது) என்ற வியாபாரியே கத்திக்குத்துக்குப் பலியானவராவார்.

இந்த வியாபாரி வழமையாக கல்மடு பகுதிக்கு பாண் வியாபாரம் செய்ய தனது சைக்கிளில் சென்று வருபவராம்.

இவர் விற்பனையை முடித்துக்கொண்டு சம்பவதினம் வனியாவை நோக்கி வந்த போது சாஸ்திரி கூழாங்குளம் என்னுமிடத்துக்கு அருகாமையில் வைத்து இவரை யாரோ வில்லுக்கத்தியால் ஒரேகுத்தில் குத்திவிட்டு, அவரிடமிருந்த ஒருதொகைப் பணத்தையும் அபகரித்துக்கொண்டு ஓடிவிட்டதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நண்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றதால் அவ்வழியால சென்ற வழிப்போக்கர்கள் இச் சம்பவம் பற்றி வவனியா பொலிசாருக்கு தெரிவித்தனராம்.

ஸ்தலத்துக்கு விரைந்த வவனியா பொலிசார் இறந்து கிடந்த வியாபாரியின் சடலத்தை கண்டதுடன் பலத்த தேடுதல்வேட்டையின் பின்னர் கே. குணசேகரம் (18 வயது), எஸ். இராஜரட்ணம் (22 வயது) என்ற இருவரையும் சந்தேகத்தில் கைதுசெய்துள்ளனர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பத்மநாதன் மரண விசாரணையை நடத்திஞர்.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் மேற்கொண்டார். இறுதியில் கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் வவனியா மாவட்ட நீதிபதி திரு. ஏ. டி. எம். கே பெத்தியாகொட முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

விசாரணைகளை வவனியா குற்றவியல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஆர். கிருஷ்ணராஜா, சப் இன்ஸ்பெக்டர் திரு. அந்தனி, ஜனப். ஹசன் திரு. எக்கநாயக்கா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் பாவிக்கப்பட்ட கத்தியும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (வெ)

# விரைவில் மின்சாரம்

(கரவெட்டி)

கரணவாய் சோளங்கன் சனசமூக நிலைய வீதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இம்மின்சாரத் திட்டத்திற்கென உடுப்பிட்டி எம் பி. திரு த. இராசலிங்கம் 60ஆயிரம் ரூபாவை பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளார்.

# பேச்சுவார்த்தை சிறப்பாக அமைந்தது

புதுடில்லி, நவ. 2.

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியுடன் தாம் நடத்திய பேச்சு வார்த்தை சிறப்பாக அமைந்ததாக பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இருநாடுகளும் படைப் பலத்தைப் பயன்படுத்தாது மனக்கசப்புக்களைத்தவிர்த்து உறவுகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து நேற்று தாய்லாந்து போய்ச் சேர்ந்த ஜெனரல் ஷியாவுல் ஹக்கை தாய்லாந்து பிரதம மந்திரி வரவேற்ருர். (வெ)

உங்கள் வீடுகளில்
ரெலிவிஷன் ஒன்று இருக்குமானல்
இன்று, தமிழ்ப்படம் ஒன்றைப்
பார்த்துமகிழலாம்----------
இன்றே, T. V. ஒன்றை
வாங்குவதற்கோ, கடன்
அடிப்படையில் வாங்கவோ
விஜயம் செய்யுங்கள்
வீனஸ் ரெக்கோடிங்
ரேடியோ வாச்வேக்ஸ்.
வாங்கும் T. V.யை பொருத்தவோ,
உடன் பெறுவதற்கோ
எம்மை நாடுங்கள்
சிறந்த வீடியோ
படப்பிடிப்புக்கும்
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்,
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

# "மரம்நாட்டும் பணி வரும்காலசந்ததிக்கும் பயன் தரும்"

(மாவிட்டபுரம்)

"மரம் நாட்டும் பணியானது எமக்கு மட்டுமல்லாது எமது வருங்கால சந்ததிக்கும் பயன்தரக்கூடியது. மரங்களை அழிக்கும்போது அதற்குப் பதிலாக மரங்களை நாட்ட நாம் முன்வந்தால் எமது சுற்றுடல் பாதுகாக்கப்படுவதுடன் மரங்களின் மூலம் பெரும் பயனையுமடையலாம்"

இவ்வாறு மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை வளவில்மரம் நாட்டும் இயக்கத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய தொழிலதிபர் திரு. க. கனகராஜா கூறினர்,

முதலாவது மரக் கன்றை நாட்டிய அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மரம் நாட்டும பணி மிகவும் தலையானதாகும். எமக்கு சூரியவெளிச்சமும், காற்றும், நீரும் இலவசமாகக் கிடைக்கின்றன. ஆகவே நாம் மரங்களை நாட்டிப் பயன்பெற முன்வரவேண்டும்.

"இன்று நமது மத்தியில் ஏராளமான மரங்கள் அழிக்கப்படுவதைக் காண்கிறோம். கற்பகதரு எனப் போற்றப்படும் பனைமரங்கள்கூட அழிக்கப்படுகின்றன. இவற்றை அழிக்காது அவற்றின்மூலம் பயனைப் பெற்று எமது பொருளாதார வளத்திற்கு வழி சமைக்கவேண்டியதவசியம்" என்றார்.

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை முருகன் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டின் பேரில் இடம்பெற்ற இம்மரம் நாட்டும இயக்கத்தின் போது வைத்தியசாலை வளவில் பயன்தரு மரக்கன்றுகளும் நிழல் தரு மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

பரிபாலன சபைத்தலைவர் வைத்தியஅதிகாரி திரு. கே. சண்முகலிங்கம் செயலாளர் திரு. கே. ஏகாம்பரம் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை செய்திருந்தனர்.

## மேற்குஜெர்மன் அதிபர் தேர்தல்

பொன், நவ, 2

மேற்கு ஜெர்மன் அதிபர் பதவிக்கு சமூக ஜனநாயக கட்சியின் சார்பில் அதன் தலைவர் திரு. ஹெல்மட் ஹோல்போட்டியிடவுள்ளார்.

மேற்கு ஜெர்மன் முன்னாள் அதிபர் திரு. ஹெல்மட்ஸ்மித் த்தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்று அறிவித்துள்ளார். (வெ)


# வாழ்க்கை முழுவதும் ஆயிரம் தொல்லைகள்.



எனவேதான் எனது குடும்பத்திற்கு மேலதிக சக்தி வழங்கும் நெஸ்டோமோல்ட் கொடுக்கிறேன்.






இன்றைய வாழ்முறை வேகத்திற்கேற்ப முழுநாளும் தேவைப்படும் சக்திச் சமநிலையை எனது குடும்பத்திற்கு வழங்க வேண்டியது தாய் என்ற முறையில் எனது கடனு கிறது. இல்லையேல் என் குடும்ப சுகாதாரம் சீர்குலைந்து விடும் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே தான் எனது குடும்பத்திற்கு வேண்டிய மேலதிக சக்திக்கு நெஸ்டோமோல்ட் வழங்குவதென்று திச்சயப்படுத்தியுள்ளேன்.

முழுச் செழுமை மிக்க நெஸ்டோமோல்ட், முழு ஆடைப்பால், விட்டமின் B, மோல்டட் பார்லி சாரம் கொண்ட தூய ஆரோக்கிய உணவு.

என்குடும்பம் எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்போடும் திகழ்வதால்,

நெஸ்டோமோல்ட் டிற்கு எனது நன்றி.

450 கிராம்: ரூ. 43 90

நெஸ்டோமோல்ட்
உங்கள் வாழ்க்கையைக் கொண்டு செலுத்த உகந்த பானம்

Nestlé

HTL CN 1141

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனு
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
சில தினங்கள் மட்டும்
முரட்டுக்காளை
[கலர்]

சாந்தி 3-வதுவாரம்
பாதை மாறிய பருவங்கள்
விரைவில்! எம் ஜி.ஆர். நவரத்தினம் (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்


## தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை

# 'எக்ஸ்ரே' இயந்திரம் பழுதடைந்துள்ளது நோயாளர் அவதி

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையின் நோயாளர்கள் மட்டுமன்றி, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலிருந்து அங்கு அனுப்பப்படும் நோயாளர்களும் 'எக்ஸ்ரே' படம் பிடித்துக் கொள்ளமுடியாமல் பெரிதும் கஷ்டமுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் 'எக்ஸ்ரே' இயந்தரம் வருடக்கணக்காக பழுதடைந்து கிடக்கிறது. அதனைத் திருத்தவும் முடியாதென நிபுணர்கள் கூறி விட்டதால் புதிய இயந்திரத்தை எதிர்பார்த்து இருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் மயிலிட்டி மார்பு நோய் வைத்திய சாலையில் இயங்கிய 'எக்ஸ்ரே' கருவியே இப்பகுதி நோயாளர்களுக்கு உதவி வந்தது.

ஆனால் கடந்த சில வாரங்களாக இதுவும் பழுதடைந்து கிடப்பதால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டமுறுகிறார்கள்,

மயிலிட்டிமார்புநோய் வைத்தியசாலைக்குச்செல்லும் மார்பு நோயாளர்களை 'எக்ஸ்ரே' படம் பிடித்துத்தான் அவர்களது நோயைப் பற்றி அறிய வேண்டியிருப்பதால் அவர்களுக்கு இந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் அத்தியாவசியமானதாக உள்ளது.

அத்துடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையிலிருந்தும் ஏராளமான நோயாளர்கள் 'எக்ஸ்ரே' படம்பிடித்துக் கொள்வதற்காக இங்கே அனுப்பப்படுகிறார்கள். குறிப்பாக காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் விபத்தில் சிக்கி தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் போது அவர்களை 'எக்ஸ்ரே' படம் பிடித்த பின்பே நோவுகள், முறிவுகளை அறிந்து சிகிச்சைக்குட்படுத்த முடிகிறது.

மேற்படி 'எக்ஸ்ரே' கருவி பழுதடைந்ததால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக புகார் கூறப்படுகிறது.

## 'பன்டேஜ்' தட்டுப்பாடு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை அரசாங்க டிஸ்பென்சரியில் மருந்துகட்டச் செல்லும் நோயாளர்கள் 'பன்டேஜ்' தட்டுப்பாட்டால் கஷ்டமுறுகிறார்கள்.

காங்கேசன்துறைப் பகுதியிலிருந்தும், சீமெந்துத்தொழிற்சாலையில் சிறு காயத்திற்குள்ளாவோரும் இந்த டிஸ்பென்சரிக்கு மருந்து கட்டிக் கொள்வதற்காக செல்கிறார்கள்.

ஆனால் இங்கு 'பன்டேஜ்' தட்டுப்பாடு நிலவுவதால்அவர்கள் கஷ்டமுறுகிறார்கள்.

மருந்து கட்டத் துண்டு கொண்டு வரவும் என்ற அறிவித்தல் ஒன்றும்அங்கு காணப்படுகிறதாம். (வெ)


வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்

வெஸ்லி தினசரி 6-15 9-15, சனி ஞாயிறு 2-30
(மானிப்பாய்) எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ரகசியப் பொலிஸ் 115
(கலர் - புதிய பிரதி)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
விஜயகுமார்-ஜெய்கணேஷ்-லதா-சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
கல்யாணகுமார் - முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்
[யாழ்.நகரில் கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகிறது]
(புதிய பிரதி)

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ் நகர்)
சுத்தர் - சுமதி - சங்கிலி முருகன் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

WINDSOR (Jaffna) Daily 5 Shows
'RISE AND FALL OF IDI AMIN'
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்——
உகண்டா ஜனாதிபதி இடி அமினின்
எழுச்சியும் வீழ்ச்சியும்--


## "திரேசாவின் வாழ்க்கையைப் பின்பற்றுக"

மட்றிட், நவ, 2

"புனித திரேசாவின் வாழ்க்கையை பின் பற்றி நடக்க கத்தோலிக்க மக்கள் முன்வர வேண்டும். புனித திரேசா கன்னியாஸ்திரிகளுக்கான கடுமையான ஒழுக்க நெறிகளை வகுத்துதந்தவராவர்."

இவ்வாறு ஸ்பெயினிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பாப்பரசர் தெரிவித்துள்ளார். (வெ)

## பாலாவி புனரமைப்பு

(மன்னார்)

திருக்கேதீசுவரம் பாலாவிக் குளத்தை மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் புனரமைப்புச் செய்து வருகின்றது.

இப்புனரமைப்பு வேலைகளுக்கென மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் 31,900 ரூபாவை ஒதுக்கியுள்ளது. (கி)

## தலைமன்னார்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிகோர வேண்டுமென போக்குவரத்து அமைச்சும், கப்பல்துறை அமைச்சும் அறிவித்துள்ளது.

ஆதலால் தலைமன்னாருக்கும் ராமேஸ்வரத்திற்கு மிடையில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை கப்பல் சேவை நடத்த அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கேட்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியதும் மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையால் தலைமன்னாருக்கும், ராமேஸ்வரத்திற்கு மிடையில் கப்பல்சேவை நடத்தப்படும்.

## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் நிகழலாம். எதிரிகளின் சூழ்ச்சி மனநிம்மதியைக் கெடுக்கும்.

விருச்சிகம்: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களால் சிறப்புகள் பரவும் முயற்சியால் முன்னேற்றத்துக்கும் இடமுண்டாம்

தனு: தெளிந்தமனம்தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தமான வாழ்வும் உண்டாம புத்திர வழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும்.

மகரம்; சிறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும் உன் வீட்டிலேயே பூசல்கள் தலை தூக்கும். இன்று உங்கட்கு திருப்தியற்ற நிலை

கும்பம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்பு கொண்டதாக இருக்கும். மதிப்பு உருவாவதற்கு இடமுண்டு.

மீனம்; திரைமறைவில்சதித்திட்டம் உருவாகும். அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவார்கள். கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பனைகள் வெட்டத் தடை

(மன்னார்)

இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் பணிப்பையடுத்து மன்னார் உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் பனைமரங்கள் வெட்டுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற இராமநாதன் பத்மேஸ்வரன் என்பவரின் மரணசாதனமில்லாச்சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

வழ. இல:ரி/3695

பத்மேஸ்வரன் கைம்பெண் சீதாதேவி பிறவுண் றோட், யாழ்ப்பாணம், தற்போது பொலிரெக், ரிரேட் ஸ்கூல், புறாணி. இவதனது தத்துவகாரி யாழ்ப்பாணம் அரசடி றோட் 126/5ம் இலக்கத்தில் வதியும் செல்வி பத்மா இராமநாதன் மூலம்

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு மார்கழி மாதம் 10ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ந் திகதி

மன்றின் கட்டளைப்படி
ஒப்பம்
த. குலஞானம்
பதிவாளர்

வரைதல்
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி

5017

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சபாபதி சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சபாபதி சுப்பிரமணியம் கைம்பெண் தங்கரத்தினம் – புன்னாலைக்கட்டுவன் மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. 142

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ம்ஆண்டு மார்கழி மாதம் 1ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

என்னால் எழுதப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

4882

ஆர். எம். இமாம்
சட்டத்தரணி,
இல. 71, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், அராலி வீதி, 26-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்துல் காதர் முகம்மது ஹுசைன் தம்பியின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினது விடயத்தில்.

மரணமெய்தியவர்

வழ. இல: தத்துவம் 3684

முகம்மது ஹுசைன்தம்பி கைம்பெண் கனிஜா,
இல: 26, அராலி வீதி,
யாழ்ப்பாணம்.

மனுதார்

மேற்சொல்லப்பட்ட மரணசாதன வழக்கு மேற்குறிப்பிட்ட காலஞ்சென்றவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1982ம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ந் திகதி.

இந்நீதிமன்ற கட்டளைப்படி,
(ஒப்பம்)
தா. குலஞானம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது,
(ஒப்பம்)
ஆர். எம். இமாம்,
மனுதாரின் சட்டத்தரணி.

5015

## சாவகச்சேரி சம்பவம்:

# மரணவிசாரணை 8-ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதலின்போது, துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான நால்வரதும் மரணவிசாரணை இம்மாதம் 8ம் திகதி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் காரியப்பர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கடந்த 27ம் திகதி அதிகாலை நடைபெற்ற பொலிஸ்நிலையத் தாக்குதலில் இறந்தவர்கள் விபரம் வருமாறு: கந்தையா (44வயது)உசனைச் சேர்ந்தவர். கருணனந்தன் 30 வயது), உடுவிலைச்சேர்ந்தவர் ஜீப்சாரதி திவகரத்ன (22வயது) பிங்கிரியாவைச் சேர்ந்தவர். இவர்கள் மூவரும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள்.

நான்காவது நபர் பொன்னையா இராசகுமார் இவர் பளை சோரன்பற்றில் நடைபெற்ற கொலை ஒன்றில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுப்பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டவர். (மா)

## "அரச உத்தியோகத்தை சேவைக்காக ராஜினமா செய்தவர் டாக்டர் பிலிப்ஸ்"

(யாழ்ப்பாணம்)

"சமூகத்துக்கும், சமயத்துக்கும், விளையாட்டுத்துறைக்கும் சேவை செய்வதற்காகவே வைத்திய கலாநிதி பிலிப்ஸ் தமது அரச வைத்திய சேவையை உதறித் தள்ளிவிட்டு, சுயமாகத் தொழில் செய்யத் தொடங்கினர்" என்று யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை, அகில இலங்கைக்குமான சமாதான நீதவானக நியமனம் செய்யப்பட்ட வைத்திய கலாநிதி ஜே பி. சி. பிலிப்ஸுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசார விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களால் இந்த வரவேற்புபசார விழா நடத்தப்பட்டது.

சுய வைத்திய சேவைச் சங்கத்தின் உபதலைவர் வைத்திய கலாநிதி யோகு பசுபதி பேசுகையில், அரசாங்க சேவையில் இருந்து கொண்டு சமூகப் பணியில் ஈடுபடமுடியாதென்பதற்காக டாகடர் பிலிப்ஸ் பதவியை ராஜினமாச் செய்துவிட்டு தொடர்ந்து இருபது வருடமாகச் சமூகத்துக்குத் தொண்டு செய்து வருகிருர் என்று குறிப்பிட்டார்.

அவருடைய சிறந்த சமூக சேவைககாகவே அரசாங்கம் அகில இலங்கை ரீதியில் சமாதான நீதவான்பட்டமளித்துக் கௌரவித்திருக்கிற தென்றும் பாராட்டிய திரு.யோகுபசுபதி "தனியார் வைத்தியர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்று அமைப்பதற்கு வைத்தியகலாநிதி பிலிப்ஸ்முன்னின்றுழைத்தவர்" என்று கூறினர்.

யாழ். கிரிக்கெட் சங்கத்தைச்சேர்ந்த பிரமுகர் திரு. ஆர். இராஜலிங்கம்ரேட்டரிக் கழகப்பிரமுகர் டாக்டர் எஸ். சேனதிராசா, புற்றுநோய் தடுப்புச்சங்கத்தலைவரும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவருமான திரு. எஸ். கனகரத்தினம், யாழ். உதைபந்தாட்டச் சங்கச்செயலாளர் திரு. ஈ.கே. குமரையா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (மா)

## மீண்டும் துண்டுப் பிரசுரங்கள்

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா ராணுவத்தை வெளியேற்றுவோம்" என்ற தலைப்புடன் தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் பெயரில் துண்டுப் பிரசுரமொன்று மீண்டும் யாழ்நகரில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான சரியானபாதை எதுவென்பதை நடைமுறை அனுபவங்களிலிருந்து கற்று தமது போராட்டத்தைத்தமது இயக்கம் நடத்திவருவதாகவும் விடுதலைப்போராளி பிரபாகரனின் வழிகாட்டலில் தாங்கள் முன்னேறுவதாகவும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசுரத்தின் மறுபுறத்தில் 'சிறிலங்கா இராணுவ வீரனுக்கு' என்று ஒரு கடிதவாசகமும் வெளியாகியுள்ளது

## கல்வி

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டவசமாக இன்று ஒழுக்கம் கீழ் நிலையில் போய்க்கொண்டிருக்கிறது எனவே எமது ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் ஏற்படக்கூடிய வகையில் அக்கறையுடன் செயல்படவேண்டும்"

யாழ் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பேசுகையில், ஆசிரியர்கள் தங்கள் சூழலிலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி ஆரம்ப வகுப்புகளிலுள்ள மாணவர்களுக்கு கல்வி போதிக்கவேண்டும்" என்ருர்.

## உணவு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நிதி அமைச்சர்பதவியைப் பறிப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக அறிகின்ருேம். புதியமுகங்கள் வரலாம் ஆனல் பழைய பாராளுமன்றம் அப்படியே இருக்கும்" என்றும் திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார். (இ)


## மரண அறிவித்தல்
### அருள்திரு அ. செ. தம்பிராசா

பரந்தன் நவஜீவன ஸ்தாபகரும் இயக்குநருமான அருள்திரு அ. செ. தம்பிராசா அவர்கள் காலமானுர்கள். இவர், அருளம்மாவின் அன்புக் கணவரும், இளைப்பாறிய தென்னிந்திய திருச்சபைக் குருவுமாவார் இறுதி ஆராதனை இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு நவஜீவனம் பரந்தனில் இடம்பெறும்.

நவஜீவனம்,
பரந்தன்.

தகவல்:
நவஜீவனக் குடும்பம்
5018


## நான் தமிழீழ பிரஜை ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நீதிமன்றத்துக்கு ... திகாரமில்லை" என்றே ... கூறினர்.

நீதிபதிக்கு பதிலளித்தமுதல் எதிரியான நடராஜா தங்கவேல்: "நாம்அனைவரும்தமிழ் மண்ணில் பிறந்தவர்கள்எனது மண்ணில் நடந்த விஷயம் குறித்து விசாரணை நடத்த ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. உங்கள் கேள்விக்குப் பதில் கூற நான் கடமைப்பட்டவன் அல்ல" என்று கூறினர்.

இதனைத் தொடர்ந்து அரச தரப்பில் ஆஜரானபிரதிசொலிசிட்டர் ஜெனரல் திரு. சுனில் டி. சில்வா, 'குற்றவாளி' என்று எதிரிகள் கூறியதைக் கருதி வழக்கை நடத்துங்கள்" என்று நீதிபதியைககேட்டுக் கொண்டார்.

### சட்டத்தரணி ஆட்சேபம்

அப்பொழுது எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு என். சத்தியேந்திரா இதனை ஆட்சேபித்தார்.

"இந்த வழக்கை விசாரணை செய்ய இந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் கிடையாது" என்று வாதிட்டார்.

இவ்வழக்கின் எதிரிகள், ஸ்ரீலங்கா அரசாங்கத்தையோ அல்லது இதன் இன்றைய அரசியலமைப்பையோ விசுவாசமாக ஏற்றுக்கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை விசாரணை செய்ய இந்த நீதிமன்றத்தினல் முடியுமா? இந்த அரசியலமைப்பில் விசுவாசமில்லாத ந ...தேசிய இனம்" என்று சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா வாதிட்டார்.

இக்கட்டத்தில் பிரதி சொலிஸிட்டர்எழுந்து; "இந்த அரசியலமைப்பின் கீழ்த்தானே ஒரு எதிரி எம்.பி யாக நியமிக்கப் பட்டுள்ளார்" என்ருர்.

இதற்குப் பதிலளித்த திரு. என்.சத்தியேந்திரா; "எம்.பி. யாக நியமனம் பெற்றது உண்மைதான். ஆனல் அவர் பாராளுமன்றம் சென்று சத்தியப் பிரமாணம் எடுக்க நீங்கள் அனுமதிக்கின்றீர்கள் இல்லையே" என்ருர்.

### இன்று தீர்ப்பு

இவ்வாதங்களைக் கேட்டறிந்த நீதிபதி, இவ்வழக்கை இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யமுடியுமாஇல்லையா என்பதுபற்றி நாளை (இன்று) தீர்ப்பளிக்கப்படும் என்று கூறினர்.

இதனைத் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

### ஏனைய வழக்குகள்

மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த ஏனைய வழக்குகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. வழக்குகள் விபரம் வருமாறு:

### அச்சுவேலி ப.நோ.கூ.ச.வழக்கு

அச்சுவேலி ப.நோ.கூ. சங்க கொள்ளை வழக்கில் எதிரிகளான ரமணகரன், உதயணன் ஆகிய இருவரும் நீதிமன்றம் வராததால இருவர் மீதும் 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டு வழக்கு விசாரணை இவ்வருடம் டிசம்பர் மாதம் மூன்றும் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### வந்தாறுமூலை கொள்ளை

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் நடராசா தங்கவேல் (கறுப்பன்) மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இவ்வழக்கு விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பதினும் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### சாவகச்சேரி துப்பாக்கிக் கொள்ளை

சாவகச்சேரி நீதிமன்ற அறையைஉடைத்து துப்பாக்கிகளைத் திருடியதாக வீரபாகு நடராஜா, நடராஜா இராஜா, ஸ்ரீ இந்திரன், ஈழவன் இராசலிங்கம், செல்லையா செல்வரத்தினம், சந்தியாப்பிள்ளை செய்வபாலன் ஆகிய ஐவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரிகள் பிணையில் விடப்பட்டிருந்த போதிலும், நேற்று நீதிமன்றம் வராததால் ஐந்து எதிரிகளுக்கும் 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது.

### பண்டார கொலை முயற்சி

கான்ஸ்டபிள் பண்டார கொலைமுயற்சிவழக்கில் நன்னித்தம்பி வாமதேவனுக்கு எதிராகக் குற்றம்சுமத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை டிசம்பர்மாதம் ஐந்தாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### இன்ஸ்பெக்டர் குமார் கொலை

ஒய்வுபெற்றபொலிஸ்இன்ஸ்பெக்டர் குமார் கொலை வழக்கில் செல்வராசா யோகச்சந்திரன் (குட்டிமணி) மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

### கான்ஸ்டபிள் ஞானசம்பந்தன்

கான்ஸ்டபிள் ஞானசம்பந்தன் கொலைவழக்கில் குட்டிமணி, கணேசானந்தன் ஜெகநாதன் (ஜெகன்), முத்துக்குமார் ஸ்ரீமார் ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது இவ்வழக்கு விசாரணை அடுத்தவருடம் மார்ச் மாதம் இரண்டாம் திகதி வரைஒத்திவைக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் திரு.என். சத்தியேந்திரா, திரு. ஜி. குமாரலிங்கம், திரு டி. விலலியம்ஸ், திரு. எஸ் ஸி. சந்திரகாசன், திரு. ரி. பேரின்பநாயகம், திரு. எஸ். உருத்திரமூர்த்தி, திரு. டி. சச்சிதானந்தம், திரு. கே. எஸ். கனக மனோகரன், திரு. ரி. பாக்கியநாதன் திரு. ஆர். எஸ். சுரேந்திரா ஆகியோர் சட்டத்தரணி திரு. சி.வி. விவேகானந்தனின் அனுசரணையுடன் மேற்படி வழக்குகளில் ஆஜரானர்கள்.

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(கரவெட்டி)

ஜோப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு ஒன்று இன்று சங்கக் காரியாலயத்தில் தலைவர் திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

## சோற்றில் கல் இருந்ததாம்!
# ஒருவர் படுகொலை!

(மன்னர்)

சோற்றிலே கல் இருந்ததாம். இதனுல் எழுந்த வாக்குவாதத்தால் சமையல்காரர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்!

தலைமன்னரிலுள்ள ஐஸ் வாடியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

ஐஸ் வாடியில் சமையல்காரராக இருந்த சின்னையா (35 வயது) என்பவரே கத்திக் குத்துக்குப்பலியானவராவார்.

இக்கொலை சம்பந்தமாக அதே ஐஸ் வாடியில் வேலை செய்யும் சகாயம் குருஸ் (35 வயது) என்பவரை பொலிசார் சநதேகத்தின் மீது கைது செய்துள்ளனர். தாழ்வுபாட்டைச் சேர்ந்தஇவர் ஏற்கனவே கொலை வழக்கொன்றில் சம்பந்தப்பட்டு பிணையில் விடப்பட்டவர்.

மரண விசாரணை நடத்திய பதில் நீதவான் ஜனப் அபுதாஹீர் சந்தேகநபரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (மா)

## என் ...யும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முழுமூச்சாக இயங்கியது."

இவ்வாறுஜனதிபதிஜே.ஆர். ஜயவர்த்தன நேற்று நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில பேசுகையில் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலை நடத்தாது பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிக்கக்கோரும் பொதுசன வாக்கெடுப்பை நடத்த ஏன் முடிவு செய்யப்பட்டது என்பது குறித்து ஜனதிபதி நேற்றைய கூட்டத்தில் விளக்கினர்.

"நக்ஸலைட் பாணியில் அமைந்த குழுவினர்தான், நாட்டில் வன்செயல்களையும் ஜனநாயகவிரோத நடவடிக்கைகளையும் தூண்டிவிடமுயற்சித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும்இக் குழுவினர் ஜனதிபதி தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், இராணுவ அரசாங்கத்தை அமைக்கவும் திட்டமிட்டிருந்தனர். சதிப் புரட்சிக்குச் சமமான இத்திட்டம் குறித்து இப்பொழுது பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்" என்று தெரிவித்த ஜனதிபதி;

"நாட்டின் ஜனநாயகம் அழிக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. படுகொலைகள் நிகழ்வதை அனுமதிக்க முடியாது. வன்முறை,கிளர்ச்சிகள் தலைதூக்காமல் இருக்கவே, பொதுத் தேர்தலை நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க முடிவு செய்தேன்" என்றும் கூறினர்.

## பஸ் - மினிபஸ் விபத்து

(யாழ்ப்பாணம்

பஸ்-மினிபஸ் விபத்தில் பெண்களுட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களுள் மூவர் படுகாயமுற்றுள்ளனர்.

கைதடியில் நேற்றுக்காலை இச்சம்பவம் நிகழ்ந்தது.

வவனியாவிலிருந்து வந்த மினிபஸ்ஸும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற போக்குவரத்துசபை பஸ்ஸுமே விபத்துக்குள்ளாகின விபத்தில் காயமடைந்த பெண்கள் விபரம்:செல்வி அபிராமி, கொண்டம்மா அல்லதுபொன்னம்மா, திருமதி நமசிவாயம். காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மா)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்குமிடையிலான உதைபந்தாட்டம் நாளை சென்பற்றிக்ஸ்மைதானத்தில் நடைபெறும். 1ம், 2ம், 3ம் பிரிவுகள் கலந்துகொள்ளும் இப்போட்டி நேற்று நடைபெறுவதாயிருந்தது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.ஐ. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.